திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜுன் 2020

**ஸப்தகிரி இலவச இணைப்பு**



திருமலை ஸ்வாமி புஷ்கரணி
அருகில் கொலுவிருக்கும்
ஸ்ரீவராஹஸ்வாமி





ஸ்ரீவாதிராஜ ஸ்வாமியாக
அனுகரிக்கும் சிறார் கலைஞர்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி



ஸப்தகிரி இலவச இணைப்பு

ஜூன் 2020

மலர்–01 இதழ்–04

உள்ளுறை பக்கம்


இந்துக்கடவுள்கள் : ஸ்ரீவராஹப்பெருமாள் 04

- திரு. வளவ. துரையன், கடலூர்.

பன்னிரு ஆழ்வார்கள் : பேயாழ்வார் 06

- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

கன்னட ஹரிதாஸர்கள் : ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள் 08

- திரு.கே. இராமநாதன், சேலம்.

சித்திரக்கதை : ஸ்வாமி புஷ்கரணியின் மகிமை 10

கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு.
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்.
சித்திரம் : திரு. கே.துவாரகநாத்.

நீதிக்கதைகள் : சினம் தவிர் 14

- திரு. சத்யதாரா, சென்னை.

சிறந்த சிறுவன் : செல்வன் யு. பரத் சர்மா 16

புதிர் : வினா–விடை 17

- திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.

சித்திரம் வரைதல் 18


முன்னட்டை : ஸ்ரீவராஹ ஸ்வாமி, திருமலை
பின்னட்டை : ஸ்ரீபெரியாழ்வார் (சித்திரம்)

**இந்துக்கடவுள்கள்**

முன்னொரு காலத்தில் இரண்யாட்சன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவனுக்கு மிகுந்த பலம் பெற வேண்டும் என்று ஆசை வந்தது. அதற்காக பிரம்மாவைக் காண கடுமையான தவம் செய்தான். பிரம்மா நேரில் வந்தார். இரண்யாட்சன், நிறைய வலிமை வேண்டும் என்ற வரம் கேட்டான். பிரம்மா கொடுத்தார். இரண்யாட்சனுக்கு மிகவும் மகிழ்ச்சி. தான் தான் அதிக பலம் கொண்டவன் என்ற கர்வம் வந்தது.

தன் வலிமையைச் சோதனை செய்து பார்க்க ஸ்ரீவைகுந்தம் போனான்.



அங்கு அழகாக உருண்டை வடிவில் பூமாதேவி அமர்ந்திருந்தாள். உருண்டை வடிவப் பெண் என்று எண்ணி அவரைத் தூக்கினான். பூதேவி, "என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்" எனக் குரல் கொடுத்தாள். அவன் அவளைக் கொண்டு போய்ப் பாதாளலோகத்தில் வைத்து விட்டான். பூதேவியின் குரல் கேட்ட மகாவிஷ்ணு அருள் செய்ய வந்தார்.

பூதேவியை இரண்யாட்சன் பாதாள லோகத்தில் மறைத்து வைத்திருப்பதை அறிந்தார். உடனே மிகப் பெரியதான வராஹ உருவமாக அவதரித்தார். பூமியின் அடியில் உள்ள பாதாள லோகம் சென்றார். அங்கிருந்த இரண்யாட்சனை வதம் செய்தார். பூதேவியைத் தம் கோரைப் பற்களுக்கிடையில் வைத்துத் தூக்கிக் கொண்டு வந்தார். பூமாதேவி மிகவும் மகிழ்ச்சி கொண்டு அவரைக் கட்டியணைத்தார்.

பல அடியார்களின் வேண்டுதலுக்கு இணங்க இம்மண்ணு லகிலேயே பெருமாள் வராஹராக பல திருக்கோயில்களில் குடி கொண்டு அருள்பாலிக்கத் திருவுள்ளம் கொண்டார். அந்நாளே வராஹ ஜெயந்தியாகும். அவருக்குக் கோரைக் கிழங்குப் பொடி செய்து அதில் சர்க்கரை, நெய், அரிசி மாவு கலந்து உருண்டை செய்து நிவேதனம் செய்கிறார்கள். திருமலையில் புஷ்கரணி தீர்த்தக்கரையில் வராஹப் பெருமாள் தனிக்கோயில் கொண்டு அருள் செய்து வருகிறார். வராஹப் பெருமாளை வழிபட்டால் பூமி சம்பந்தமான தொழில் அபிவிருத்தி அடையும். சனி தோஷம் நீங்கும். திருமணத் தடை நீங்கும். புத்திர சம்பத்து வரும். நாமும் அவரை வழிபட்டு அருள் பெறுவோமாக.

**லட்சுமி வராஹர் காயத்ரி மந்திரம் :**

ஓம் தத்புருஷாய வித்மஹே ஸந்தாந புத்ராய தீமஹி
தன்னோ விஷ்ணுஹ் ப்ரசோதயாத்

– திரு. ஏ.எஸ். துரையன்,
கடலூர்.

பன்னிரு ஆழ்வார்கள்



# பேயாழ்வார்

ஆழ்வார்கள் பன்னிரண்டு பேரில் மூன்றாவது ஆழ்வார் பேயாழ்வார். இந்த ஆழ்வார் சென்னையில் உள்ள மயிலாப்பூரில் ஆதிகேசவப் பெருமாள் கோயில் திருக்கிணற்றில் உள்ள ஒரு செவ்வல்லி மலரில் அவதரித்தவர். இவருடைய பிறப்பு என்பது மனித பிறப்பு போல இல்லை. தாயின் வயிற்றில் பிறக்காமல் இறைவன் அருளால் தோன்றியவர்.

பெருமாள் கையில் உள்ள ஐந்து ஆயுதங்களில் ஒன்றான நந்தகம் என்னும் வாளின் அம்சமாக அவதரித்தவர். இவர் அவதரித்த மாதம் ஐப்பசி மாதம், வளர்பிறை, தசமி திதி, வியாழக் கிழமை, சதய நட்சத்திரம்.

இவர் பிறந்ததிலிருந்தே ஒரு யோகியாக வாழ்ந்தவர். தெய்வ அம்சமான இவருக்கு எல்லாக் கலைகளும் படிக்காமலேயே வந்து சேர்ந்தன.

இவர் பாடிய பாடல்களைத் தொகுத்து மூன்றாம் திருவந்தாதி என்று பெயரிட்டு நாம் சேவித்து வருகிறோம்.

பெருமாள் மேல் ஆராக்காதல் கொண்டு எதைப் பார்த்தாலும் பெருமாளாகக்

கருதினார். பெருமாளை நினைத்து அழுவார். தொழுவார். ஆடுவார். பாடுவார். இறை பக்தியில் தன்னை முழுதும் மறந்து போனதால் இவர் பேயாழ்வார் என அழைக்கப்பட்டார்.

இவர் 14 திருத்தலங்களைப் பாடி இருக்கின்றார் அவை: திருவரங்கம், திருக்குடந்தை, திருவிண்ணகர், திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர், அட்டபுயகரம், திருவேளுக்கை, திருப்பாடகம், திருவெஃகா, திருவல்லிக்கேணி, திருக்கடிகை, திருவேங்கடம், திருப்பாற்கடல், பரமபதம்.

இவரும் பொய்கை ஆழ்வாரும் பூதத்தாழ்வாரும் ஒரே காலத்தில் அவதரித்த படியால் இவர்கள் மூவரையும் இணைத்து முதலாழ்வார்கள் என்று சொல்லும் மரபு உண்டு. இவருடைய அற்புதமான ஒரு பாசுரத்தைச் சொல்லி நாம் நிறைவு செய்யலாம்.



பகவான் எங்கெங்கே இருக்கின்றான் என்று சொன்னால், பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கின்றான். திருவேங்கடத்தில் நின்று கொண்டிருக்கிறான். பகவான் வரவேண்டும் என்று நம் மனதை தாமரை மலர்போல் வைத்துக் கொண்டிருந்தால் நிச்சயமாக பகவான் அங்கு வந்து அமர்வான். இதோ அந்த பாசுரம்.


*"பாற்கடலும் வேங்கடமும் பாம்பும் பனி விசும்பும்*
*நூல்கடலும் நுண்ணூல தாமரைமேல் பாற் பட்*
*டிருந்தார் மனமும் இடமாகக் கொண்டான்*
*குருந்தொசித்த கோபாலகன்"*

நம் மனதையும் பகவானுக்குத் தயாராக வைத்திருப்போமா...

– பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி.

தென்கன்னட மாவட்டத்தில் கும்பகாசி என்னும் இடத்திற்கு அருகில் ஹூவினகெரெ என்னும் கிராமத்தில் ராமாச்சார்யர், சரஸ்வதி என்னும் தம்பதியருக்கு ஸ்ரீவாதிராஜர் நன்மகனாகப் பிறந்தார். குரு இவரை “பூவராஹன்” என்றே அழைத்தார். குரு வாகீச தீர்த்தரின் பார்வையில் வளர்ந்த பூவராஹன் தன் கூர்மையான மதி நுட்பத்தாலும், சிறந்த கல்வியறிவாலும் தன் குருவையே வியப்பில் ஆழ்த்தினார். பின்னர் தம் இளம் வயதிலேயே துறவு வாழ்வை ஏற்று ஸ்ரீவாதிராஜ ஸ்வாமி என்ற பெயரால் புகழ் பெற்றார். மத்வாசார்யார் நிறுவிய எட்டு மடங்களில் ஒரு மடத்தின் தலைவராக ஸ்ரீவாதிராஜர் பொறுப்பேற்றார். சிறந்த படைப்பாற்றலும் ஆழ்ந்த பக்தியும் கொண்ட இவர் தம் வாழ்வில் பல அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார்.

ஒரு முறை ஒரு பொற்கொல்லன் ஐம்பொன்னால் விநாயகர் சிலையை வடிக்கத் தொடங்கினான். ஆனால் அது ஹயக்ரீவ வடிவச் சிலையாக அமைந்தது. அன்று இரவு அவன் உறங்கிய போது கனவில் தோன்றிய இறைவன், “நீ உருவாக்கிய ஐம்பொன் சிலையை எடுத்துச் சென்று ஸ்ரீவாதிராஜரின் திருக்கைகளில் ஒப்படைத்து விடு” என்று கூறி மறைந்தார். அதன் படி பொற் கொல்



# ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள்

லன் அச் சிலையை ஸ்ரீவாதி ராஜரிடம் பணிவுடன் ஒப்படைத்தான். அன்று முதல் அவர் பூவராஹ நரசிம்ம மூர்த்தியுடன் ஹயக்ரீவர் சிலையையும் வைத்து வழிபாடு செய்யத் தொடங்கினார். வழிபாட்டின்போது இறைவனுக்கு நைவேத்தி யமாக கடலை கொண்டு பாயாசம் தயாரிக்கப்பட்டது. ஸ்ரீவாதிராஜர் பாயாசத்தை பெரிய பாத்திரத்தில் நிரப்பி அதைத் தன் இரு கைகளாலும் தூக்கி தலைமீது வைத்து வணங்கினார். என்ன வியப்பு! அப்போது திடீரென அவருக்குப் பின்னால் வெள்ளை நிறக் குதிரை ஒன்று தோன்றியது. அது தன் முன் இரண்டு கால்களையும் ஸ்வாமியின் தோள் மீது வைத்து நின்று பாத்திரத்தில் இருந்த பாயாசத்தை சுவைத்து மகிழ்ந்து சென்றது.

மற்றொரு முறை பண்டரிபுரத்தில் இவர் ஹயக்ரீவருக்கு வழிபாடு நடத்திக் கொண்டிருந்தார். வழிபாட்டு நேரத்தில் திடீரென்று அங்கே தோன்றிய வெள்ளைக் குதிரை ஒன்று வயலில் விளைந்திருந்த கடலை அனைத்தையும் உண்டு மேய்ந்தது. இச்செயல் தினமும் நடந்து வந்தது. வயலின் உரிமையாளன் மடத்தைச் சேர்ந்த குதிரையால் வயல் நாச மாவதைக் கண்டு, ஸ்ரீவாதிராஜரைச் சந்தித்து, குதிரையால் ஏற்பட்ட இழப்பை வேதனையுடன் கூறினான். அதைக் கேட்ட ஸ்வாமி அவனிடம், "நாளை உன் வயலில் இரு மடங்கு விளைச்சலைக் காண்பாய்" என்று கூறி அனுப்பி வைத்தார். அவர் கூறிய படியே அடுத்த நாள் அவன் தன் வயல் முழுவதும் கடலை விளைந்திருப்பதைக் கண்டு அளவற்ற வியப்படைந்தான்.

இவர் தம் எழுச்சிப் பாடல்கள் மூலமாக மக்களுக்கு நல்வழி காட்டி நன்மொழிகளைக் கூறி இவர் மக்கள் மனதில் அமைதி விதைகளை ஆழப்பதித்தார்.


| | |
|---|---|
| **தெலுங்கு மூலம்** | **: திரு.எஸ்.நாகராஜாசார்யுலு** |
| **தமிழாக்கம்** | **: திரு. கே.இராமநாதன், சேலம்.** |

சித்திரக்கதை

# ஸ்வாமி புஷ்கரணியின் மகிமை


கதை மூலம்:
திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு
தமிழாக்கம் :
திரு. வ.ஓ. சுரேஷ்
சித்திரம்:
திரு. கே.துவாரகநாத்





ஒப்பந்தத்தின்படி அரசன் முதலில் உறங்கினான். கரடியும் அவனை கண்ணின் இமை போன்று காத்தது. அப்பொழுது மரத்தின் கீழ் இருந்த சிங்கம் கரடியிடம்...
கரடியே! நான் மிகவும் பசியுடன் உள்ளேன். உறங்கும் அரசனை கீழே தள்ளிவிடு. சாப்பிட்டு விடுகிறேன்
சிங்கமே! என்னை முழுமையாக நம்பிய அரசனுக்கு துரோகம் செய்வது அறமாகாது. நான் அப்பணி செய்ய மாட்டேன். இங்கிருந்து சென்று விடு!
பிறகு அரசன் கண் விழித்ததும் கரடி உறங்கியது. அதாவது அரசன் மீதிருந்த நம்பிக்கையால். அப்பொழுது மரத்தின் கீழிருந்த சிங்கம்...
அரசே! கரடியை கீழே தள்ளி விடு. அது எனக்கு உணவு!
அப்படியே ஆகட்டும்! கரடியை உடனே கீழே தள்ளிவிடுகிறேன்
சிறிதும் ஆலோசிக்காமல் கரடியை கீழே தள்ள முயற்சித்தான் அரசன். ஆனால் கண் விழித்த கரடி சுதாரித்துக் கொண்டு ஒரு மரக்கிளையை இறுக்கமாகப் பற்றி, உடனே கோபத்துடன் அரசனிடம்...
சீ... நன்றிக் கெட்டவனே. உன்னை நம்பி காத்த எனக்கு துரோகம் பண்ணினாய். இப்பாவத்திற்கு மதிகெட்டு பித்துப் பிடித்தவனாவாய்
ஐயோ! தவறு செய்து விட்டேனே!


தர்மகுப்தன் பித்து பிடித்தவனாகி சுற்றித் திரிந்தான். தம் அரசனை தேடி வந்த வீரர்களிடம் அகப்பட்டான். உடனே அவர்கள் அரசனை அவன் தந்தையான நந்தனிடம் அழைத்துச் சென்றனர்
என் மகனுக்கு எதனால் பித்து உண்டாயிற்று?
பிரபு! எங்களுக்கு எதனால் என்று தெரியவில்லை!
சரி... இந்த பித்து எப்படி தீரும்! ஏதாவது ஆலோசித்தீரா?
பிரபு! ஜைமினி முனிவரால் மட்டுமே இவ்வாபத்தி லிருந்து காப்பாற்ற முடியும்
உடனே அனைவரும் சேர்ந்து ஜைமினி முனிவர் ஆசிரமத்திற்குச் சென்றனர். நந்தன் முனிவரை வணங்கி...
முனிவரே! என் மகனின் பித்து நீங்க வழி என்ன?
அரசனே! உன் மகன் கரடிக்கு நம்பிக்கை துரோகம் செய்தான். அதன் சாபத்தி னால்தான் பித்து பிடித்தவனானான்


முனிவரே! என் மகன் தர்மம் தவறினான்...
ஆம்!
அரசே! உன் மகனை வேங்கடாசலத்திற்கு அழைத்துச் சென்று, அங்குள்ள ஸ்வாமி புஷ்கரணியில் நீராடச் செய். உடனே பித்து நீங்கும்
முனிவரே! தயவு செய்து பித்து நீங்க வழி காட்டுங்கள்!
நந்தன் தர்மகுப்தனை வேங்கடாசலத்திற்கு அழைத்துச் சென்று, ஸ்வாமி புஷ்கரணியில் நீராடச் செய்தார். உடனே தர்ம குப்தன் தன் பழைய நினைவிற்குத் திரும்பினான்
தந்தையே! என்னை காப்பாற்றிய கரடிக்கு நம்பிக்கை துரோகம் செய்தேன். அதற்கான தண்டனையை அனுபவித்தேன். இறுதியில் நற்பலனைப் பெற்றேன்
மகனே! எல்லாம் திருவேங்கடமுடையானின் கருணை! ஸ்வாமி புஷ்கரணியின் மகிமை!
அடுத்த இதழில்... திருவேங்கடமுடையானின் மற்றொரு திருலீலையை காண்போம்!
முற்றும்.



நீதிக்கதைகள்

# சினம் தவிர்!

திரு. சத்யதாரா, சென்னை.

தீயினால் சுட்டபுண் உள்ளாறும்
ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

– திருக்குறள்.

கருத்து : நெருப்பினால் ஏற்படும் காயங்கள் தழும்புகளோடு மட்டுமே நிற்கும் சுடப்பட்ட பகுதிகள் ஆறிவிடும். ஆனால் நாவினால் கூறப்பட்ட ஒரு தீய சொல்லினால் உருவாகும் காயங்கள் ஒரு போதும் ஆறவே ஆறாது. பின் விளைவுகளை ஏற்படுத்தியே தீரும்.

திருக்குறளில் காணப்படும் மேற்கண்ட நீதி நெறிகளை, மஹாபாரத காவியத்தில் காணப்படும் நிகழ்வுகளில், ஒரு சிறந்த உதாரணத்தின் மூலம் தெளிவாக அறிகிறோம்.

ஒருமுறை பாண்டவர்கள் திருதராஷ்டிரன் மற்றும் கௌரவர்களின் அழைப்பின் பேரில் சூதாட்டத்தில் பங்கு கொள்கின்றனர். துரியோதனன் சார்பாக அவனது மாமன் சகுனி பகடையாட்டத்தில் இணைகிறான்.

கோலாகலமாக பகடையாட்டம் துவங்குகிறது. இந்திரப் பிரஸ்தத்தினை ஆண்டு வரும் “யுதிஷ்டிரன்” படிப்படியாக தன்னுடைய உடைமைகள் ஒவ்வொன்றையும் பந்தயப் பொருளாக வைத்து தோற்கிறான். அடுத்ததாக நாட்டையும் தம்பிகளையும் தன்னையும் பணயமாக வைத்து சகுனியிடம்

முற்றிலுமாக தோல்வி அடைந்து, துரியோதனனுக்கு அடிமை யாகி நிற்கிறான்.

இந்நிலையில் சகுனி, யுதிஷ்டிரனிடம் "நீ மகாராணி திரௌபதியை பணயமாக வைத்து ஆடினால், நீ இழந்த அனைத்து செல்வங்களையும் மீட்டு விடலாம் என்றான்.

சகோதரர்கள் தடுத்தும் கேட்காமல் திரௌபதியையும் பணயம் வைத்து தோற்கிறான். உடனே துரியோதனன், திரௌபதி இனி என் அடிமை. அவளை இழுத்து வா என தன் தம்பி துச்சாதனனுக்கு ஆணையிடுகிறான். துச்சாதனனும் திரௌபதியை இழுத்து வந்து அரசவையில் அனைவர் முன்னிலையிலும் துகிலுறிகிறான்.

மேலும், திரௌபதியை நோக்கி, ஆணவத்துடன் "நீ என் அடிமை... என்று தனது இடது தொடையினை தட்டி காட்டி, எனது தொடையின் மீது அமர்ந்து கொள்" என கொடுமை யான வார்த்தைகளால் ஏசுகிறான். கடும் சினம் கொண்ட திரௌபதி, "உனது இடது தொடையினை உடைத்து" அதிலி ருந்து பெரும் ரத்தத்தினை தடவிய பின்தான் இந்த கூந்தலை முடிப்பேன் என்று சபதம் செய்கிறாள்.

பின்பு பெரும் போர் ஏற்பட்டு, திரௌபதியும் தனது சபதத்தினை நிறைவேற்றிக் கொள்கிறாள். துரியோதனன் வாயினால் கூறப்பட்ட கொடுமையான சொற்கள் திரௌபதி யின் மனதில் ஆறாமல் இருந்து மேன்மேலும் கொடுமையாக எரிந்துக் கொண்டே இருந்தது. அதன் விளைவே துரியோதன னின் அழிவு.

குழந்தைகளே! சினத்தை தவிர்த்து அன்பாகவும், அறிவு பூர்வமாகவும் பேசுவோம்!



# சிறந்த சிறுவன்

என் லட்சியம் : தெலுங்கு இலக்கிய ஆராய்ச்சி, தெலுங்கு மொழியை வளர்ச்சியடைய செய்தல்

| | | |
|---|---|---|
| பெயர் | – | யு. பரத் சர்மா |
| வகுப்பு | – | 9ஆம் வகுப்பு |
| பிறந்த தேதி | – | 17.05.2006 |
| தந்தை பெயர் | – | உப்பலதடியம் ராஜீவலோசன சர்மா |
| தாயார் பெயர் | – | திருமதி. சைலஜா |
| பள்ளி | – | பாரதிய வித்யாபவன் ஸ்ரீவேங்கடேஸ்வரா வித்யாலயம், திருப்பதி |

## பெற்ற பரிசுகள் :

2009 – எல்.கே.ஜி. முதலே பகவத்கீதையில் பரிசுகள்.

2011 – 1ஆம் வகுப்பில் மார்க் சின்மயா கல்வி கூடத்தார் நடத்திய கோவிந்த நாமங்கள் போட்டியில் முதல் பரிசு.

2013 – பாரதீய வித்யா பவன் நடத்திய புத்தகக் கண்காட்சியில் பம்மெர போதனா பாத்திரம் ஏற்று பரிசு பெற்றார்.

2014 – சின்மயா மிஷன் நடத்திய மாவட்ட அளவிளான பகவத்கீதை போட்டியில் மூன்றாம் பரிசு.

– இராஷ்டிரிய சமஸ்கிருத பல்கலைக்கழகம் நடத்திய பகவத்கீதை போட்டியில் முதல் பரிசு.

2015 – எஸ்.ஐ.பி. அபாகஸ் விஜயவாடாவில் நடத்திய "எஸ்.ஐ.பி. ரீஜினல் ப்ராடிஜ்" போட்டியில் பரிசு.

2017 – சத்யசாயி பாலவிகாஸ் நடத்திய மாவட்ட அளவிளான ஏகபாத்திர அபினயம் மற்றும் சங்கீத போட்டியில் முதல் பரிசு.

2018 – இராமகிருஷ்ண மிஷனில் ஸ்வாமி விவேகானந்த ஜெயந்தி நாளில் "விநாயக ரஜத" பரிசு.

– திருப்பதி பிலிம் சொசைடி நடத்திய "ஏகபாத்திர அபிநயனம்" போட்டியில் துரியோதனன் பாத்திரம் ஏற்று முதல் பரிசு.

– திருப்பதி அறிவியல் மையத்தார் நடத்திய "கலைஉத்ஸவம்" மாவட்ட அளவிளான போட்டியில் மிருதங்கம் வாசிப்புத்திறனில் முதல் பரிசு.

2020 – சம்ஸ்கார பாரதியினர் இணையம் வாயிலாக நடத்திய மாநில அளவிளான கவிதை போட்டியில் முதல் பரிசு.

புதிர்

# வினா - விடை

1. இராமபிரானின் மீது அதிக ஈடுபாடு கொண்ட ஆழ்வார் யார்?

அ) பெரியாழ்வார் ஆ) பூதத்தாழ்வார்

இ) குலசேகர ஆழ்வார் ஈ) ஆண்டாள்

2. சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சேவை சாதிக்கும் திவ்ய தேசம் எது?

அ) திருநின்ற ஊர் ஆ) திருவெஃகா

இ) திருநீர்மலை ஈ) திருக்கடிகை

3. சதுர்த்த ரங்கம் என்று போற்றப்படும் திவ்யதேசம் எது?

அ) திருவரங்கம் ஆ) திருஉறையூர்

இ) திருக்குடந்தை ஈ) திருக்கூடலூர்

4. கோயிலடி என்று அழைக்கப்படும் திவ்ய தேசம் எது?

அ) திருக்கண்டியூர் ஆ)திருஅன்பில்

இ) திருஆதனூர் ஈ) திருப்பேர்நகர்

5. திருமழிசையாழ்வார் அவதரித்த திருநட்சத்திரம் எது?

அ) அவிட்டம் ஆ) சதயம்

இ) மகம் ஈ) விசாகம்

6) ஸ்ரீஹரிலஷ்மி என்னும் திருநாமத்துடன் தாயார் சேவை சாதிக்கும் திவ்ய தேசம் எது?

அ) திருவனந்தபுரம் ஆ)திருநாவாய்

இ) திருகலிக்கரை ஈ)திருப்புலியூர்

7) திருப்பாணாழ்வார் மங்களாசாசனம் செய்த பாசுரங்கள் எத்தனை?

அ) 10 ஆ) 8

இ) 7 ஈ) 20

---


திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.

---

1) இ, 2) ஆ, 3) இ, 4) ஈ, 5) இ, 6) அ, 7) அ

# சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



மேலே உள்ள படத்தை கீழே உள்ள கட்டத்தில் வரையுங்கள்...



பிரம்மோத்ஸவத்தில் சிறார் கலைஞர்கள்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 30-06-2020. Regd. with the Registrar of Newspapers under
"RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

